

# கடற்கன்னிகளும் கடற்புறாக்களும்

*பூங்கோதை*

3.1

STEM-Kalvi Charity



ஒரு கடற்கரை ஓரத்தில் ஒரு கடற்புறாவும் அதன் குடும்பமும் வாழ்ந்து வந்தன. அங்கு தென்னை மரங்களும் தாழை மரங்களும் அடர்ந்து வளர்ந்திருந்தன.



ஒரு நாள் கடற்புறாக் குடும்பம் உணவு தேடி, கடலை அண்டிப்  பறந்து சென்றது . அவர்கள் தமக்கு வேண்டிய அளவு மீன்களைப் பிடித்தபடி கரையை நோக்கி வந்தன. அப்போது  அம்மா கடற்புறா அதிசயமான விடயம் ஒன்றைக் கண்டது.



கடற்பாறைகளில் ஒன்றில் அந்த அம்மா கடற்புறா அமர்ந்து கொண்டது. குடும்பத்தவர் அனைவரும் ஒரே இடத்தில் இருப்பது கடற்புறாக்களின் வழமை. ஆகையினால், அனைவரும் அம்மா கடற்புறாவோடு ஒரே பாறையில் அமர்ந்து கொண்டன.



இப்போது அம்மா  பார்த்துக் கொண்டிருந்த
இடத்தை நோக்கி மற்றைய கடற்புறாக்களும்
பார்த்தன. அவைகளுக்கும்   தம் கண்களை
நம்ப முடியவில்லை .



அவர்களது  பாறைக்கு மிக அண்மையில், இன்னொரு பாறையில், மூன்று கடற்கன்னிகள் அமர்ந்திருந்தனர். அவர்கள் மிகவும் மகிழ்வுடன் காட்சியளித்தனர்.



"யார் இவர்கள்? இவ்வளவு அழகாக இருக்கிறார்கள்?" குஞ்சுப் பறவை  கேட்டது.
"இவர்கள் தான் கடற்கன்னிகள். கடலின் தேவதைகள். இவர்களில் ஆண்களும் உண்டு." அப்பா கடற்புறா விளக்கம் அளித்தது.
"நாம்  இவர்களை இதற்கு முன்பு பார்த்ததில்லையே?" என குஞ்சுப்பறவைகள் எல்லாமே அதிசயித்தன.
"ஆம், அவர்கள் அபூர்வமாகத் தான் தென்படுவார்கள்."
அம்மா கடற்புறா மேலும் ஒரு விளக்கத்தைக் கொடுத்தது.



கடற்புறாக்கள் அடிக்கடி அந்த மூன்று கடற்கன்னிகளையும் பார்ப்பது வழக்கமாகியது.



சில மாதங்கள் கழிந்தன. ஒரு நாள் ஒரு பெரிய வாகனமொன்றில் சில மனிதர்கள் அந்தக் கடற்கரைக்கு வந்தனர். தம் வாகனத்தில் இருந்த குப்பைகளைக் கடலில் எறிந்தனர்.
அப்படி எறிந்த பல பொருட்கள், பல கடல் உயிரினங்களுக்குத் தீமை விளைவிப்பவை. அதனை பின் வந்த நாட்களில் கடற்புறாக்கள் தெரிந்து கொண்டன.



முன்பு அழகாகவும் ஆரோக்கியத்துடனும் காணப்பட்ட கடற்கன்னிகள் தமது அழகை இழந்தனர். நோய் வாய்ப்பட்டவர்கள் போலக் காட்சியளித்தனர்.



அதே வேளையில், பல கடல் உயிரினங்களும் இறந்தன. இறந்தவை கரை ஒதுங்கத் தொடங்கின.கடற்புறாக்களுக்கு தாமும் வேறு வீடு தேடிப் போய் விடலாமா எனத் தோன்றியது.



கடற்கரை ஓரமாக வசித்து வந்த மீனவர்களும்  இது குறித்து வருந்தினார்கள். அவர்கள் தமது கடற்பரப்பிற் காணப்பட்ட கழிவுப் பொருட்களை அகற்றத் தொடங்கினர்.



அதனைப் பார்த்த கிராமத்து மக்களும் கழிவுகளை அகற்றும் பணியில் ஈடுபட்டனர். கடற்புறாக்களும் அவர்களோடு சேர்ந்து உதவத் தொடங்கின.



கடற்கன்னிகளின் முகங்களில் மகிழ்ச்சி மீண்டும் சிறிது சிறிதாக வர ஆரம்பித்திருப்பதை கடற்புறாக்கள் அவதானித்தன.



கடற்புறாக்களுக்கும் தமது குடியிருப்புகள் சுத்தமாவது கண்டு அளவில்லா மகிழ்ச்சியும் திருப்தியும் ஏற்பட்டிருந்தது. கடல் வாழ் உயிரினங்களும் மகிழ்வடைந்தன.

**முற்றும்**

**Publisher:** STEM-Kalvi Charity

**Email**: STEMkalvi@gmail.com

**Web:** WWW.STEMkalvi.org

**Writer :** Poonkothai, UK

**Book:** Kadatkannikalum Kadatpuraakkalum
(கடற்கன்னிகளும் கடற்புறாக்களும்)

**Language: Tamil**

**Reading Level**: 3.1

**ISBN:** xxxxxxx

**Editor**: Dr K Ganesan, Founder and Director
STEM-Kalvi

This book is part of the **'1000 Reading Books'** initiative by STEM-Kalvi Charity, dedicated to creating literature for children under 10. These books aim to boost literacy rates in schools, addressing a critical need revealed in a UNICEF study conducted in 2022



**About the writer :** Poonkothai migrated from Sri Lanka to the UK in 1989. After completing her graduation and post-graduation in science and education, she entered the educational field. She has been teaching as a qualified full-time English teacher at Government Schools in the UK for several years. Poonkothai published a Health Promotion book in 2004 and a collection of short stories in 2022, dedicating her Tamil skills to her late mother, a Tamil teacher, Puvaneswary.

| | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Sub Level | 1.1 | 1.2 | 1.3 | 2.1 | 2.2 | 2.3 | 3.1 | 3.2 | 3.3 | 4.1 | 4.2 | 4.3 | 5.1 | 5.2 | 5.3 | 6.1 | 6.2 | 6.3 |
| Main Level | 1 | | | 2 | | | 3 | | | 4 | | | 5 | | | 6 | | |

STEM-KALVI CHARITY
Science | Technology | Engineering | Mathematics